## அக்டோபர் – 04 – வியாழன்

### புனித பிரான்சிஸ் அசிசி

### “அறுபடை மிகுதி வேலையாள்களோ குறைவு” லூாக்.10:2

### முதல் வாசகம் : யோபு 19 : 21 – 27

என்மேல் இரங்குங்கள் என்நண்பர்காள்! என்மேல் இரக்கம் கொள்ளுங்கள் ஏனெனில் கடவுளின் கை என்னைத் தண்டித்தது.இறைவனைப் போல் நீங்களும் என்னை விரட்டுவது ஏன்? என் சதையை நீங்கள் குதறியது போதாதா?ஓ! என்வார்த்தைகள் இப்பொழுது வரையப்படலாகாதா? ஓ! அவை ஏட்டுச்சுருளில் எழுதப்படலாகாதா?இரும்புக்கருவியாலும் ஈயத்தாலும் என்றென்றும் அவை பாறையில் பொறிக்கப்பட வேண்டும்.ஏனெனில், என்மீட்பர் வாழ்கின்றார் என்றும் இறுதியில் மண்மேல் எழுவார் என்றும் நான் அறிவேன்.என்தோல் இவ்வாறு அழிக்கப்பட்டபின், நான் சதையோடு இருக்கும்போதே கடவுளைக் காண்பேன்.நானே, அவர் என் பக்கத்தில் நிற்கக்காண்பேன் என்கண்களே காணும் வேறு கண்கள் அல்ல. என் நெஞ்சம் அதற்காக ஏங்குகின்றது.

**பதில்பாடல் :** ஆண்டவர் தாவே என் உரிமைச் சொத்து.

### நற்செய்தி : லூக்கா 10 : 1 - 12

அக்காலத்தில் இயேசு வேறு எழுபத்திரண்டு பேரை நியமித்து, அவர்களைத் தாம்போகவிருந்த எல்லா ஊர்களுக்கும் இடங்களுக்கும் தமக்கு முன்னே இருவர் இருவராக அனுப்பினார். அப்போது அவர் அவர்களை நோக்கிக்கூறியது. ”அறுவடை மிகுதி வேலையாள்களோ குறைவு. ஆகையால் தமது அறுவடைக்குத் தேவையான வேலையாள்களை அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள். புறப்பட்டுப்போங்கள் ஓநாய் களிடையே ஆட்டுக்குட்டிகளை அனுப்புவதுபோல் உங்களை நான் அனுப்புகிறேன். பணப்பையோ வேறுபையோ மிதியடிகளோ எதுவும் நீங்கள் எடுத்துச் செல்லவேண்டாம் வழியில் எவருக்கும் வணக்கம் செலுத்தவேண்டாம்.நீங்கள் எந்த வீட்டுக்குள் சென்றாலும், ”இந்த வீட்டுக்கு அமைதி உண்டாகுக!” என முதலில்கூறுங்கள். அமைதியை விரும்புபவர் அங்கு இருந்தால், நீங்கள் வாழ்த்திக் கூறிய அமைதி அவரிடம் தங்கும் இல்லாவிட்டால் அது உங்களிடமே திரும்பிவிடும். அவர்களிடம் உள்ளதை நீங்கள் உண்டு குடித்து அந்தவீட்டிலேயே தங்கியிருங்கள். ஏனெனில் வேலையாளர் தம் கூலிக்கு உரிமை உடையவரே. வீடுவீடாய்ச் செல்லவேண்டாம்.நீங்கள் செல்லும் ஊரில் உங்களை ஏற்றுக்கொண்டால் உங்களுக்குப் பரிமாறுவதை உண்ணுங்கள். அங்கு உடல்நலம் குன்றியோரைக் குணமாக்கி, இறையாட்சி அவர்களை நெருங்கிவந்துவிட்டது எனச் சொல்லுங்கள்.நீங்கள் செல்லும் ஊரில் உங்களை ஏற்றுக் கொள்ளாவிட்டால் அதன் வீதிகளில் சென்று,”எங்கள் கால்களில் ஒட்டியுள்ள உங்கள் ஊர்த் தூசியையும் உங்களுக்கு எதிராக உதறிவிடுகிறோம். ஆயினும் இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது என்பதை அறிந்து கொள்ளுங்கள்” எனச்சொல்லுங்கள்.அந்த நாளில் அவ்வூர் பெறும் தண்டனை சோதோம் நகரினர் பெறும் தண்டனையை விட கடினமாகவே இருக்கும் என உங்களுக்குச் சொல்கிறேன்“ என்றார்.

**தியானம்:** மண்ணிலிருந்து உருவாக்கப்பட்ட மனிதனுக்குள் கடவுள் தமது விலைமதிப்பில்லாத ஆன்மாவை வைத்திருக்கின்றார். மனிதர்கள் அழிந்துபோகும் இந்த உடலுக்கும் உணர்வுக்கும் தங்களை ஒப்புக்கொடுத்து தங்களுக்குள் இருக்கும் அழியாத ஆன்மாவைப் பாதுகாக்க மறந்துபோய்விடுகிறார்கள். இதனால் மனிதர்கள் பாவத்திற்கும், பாவத்தின் சம்பளமான சாவுக்கும் தங்கள் வாழ்வை அர்பணித்து தங்கள் ஆன்மாவை நரகத்தில் அழிய ஒப்புக்கொடுத்துவிடுகிறார்கள். ஆனால் ஆன்மாக்களை அழியாமல் இரட்சிக்கவந்த இயேசு நம்முடைய ஆன்ம அறுவடைக்காக திருத்தூதர்களையும் வேறு 72 சீடர்களையும் தேர்ந்துகொள்கின்றார். அவர்களை இந்த பாவம் நிறைந்த உலகத்திற்குள்ளாக மனிதர்களை பிடிக்கும் நோக்கத்தோடு அவர்களை அனுப்பிவைக்கின்றார். யோபுவின் வாழ்க்கையில் பார்ப்பதுபோல நோய், தனிமை, கைவிடப்பட்ட நிலை, விமர்சனங்கள் இவற்றைப்பயன்படுத்தி பாலைநிலமாக மாற்றப்பட்ட நமது வாழ்க்கையை சுட்டிக்காட்டி நம்மை கடவுளைவிட்டு தூர விலகிச் செல்ல வழிவகுக்கும் சாத்தானின் வழிமுறைகளைக் குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இத்தகைய ஓநாய்கள் மத்தியில்தான் இன்று ஆண்டவர் நம்மையும் அனுப்பி வைத்திருக்கின்றார். நாம் மனம் திருந்தி பரலோகம் அடைந்து விடக்கூடாது என்பதற்காக கர்ச்சிக்கும் சிங்கம்போல சுற்றுத்திரியும் சாத்தான், 24 மணிநேரமும் நம்மை பாவங்களில் விழச் செய்ய போராடிக்கொண்டிருக்கின்றான். எனவே விழிப்போடு இருந்து, நம்முடைய ஆன்மாக்களை காத்துக்கொண்டு, கடவுளை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு, அவருடைய பிரசன்னத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் ஆற்றலால் இந்த உலகத்தின் இருளான சக்திகளை வென்று ஆன்மாக்களை அறுவடை செய்ய வேண்டும். இயேசு சாதாரண மனிதர்களாக நம்மை இந்த உலகத்திற்குள் அனுப்பவில்லை மாறாக அவருடைய அதிகாரத்தை நம்மிலே தாங்கியவர்களாக அனுப்புகின்றார். “தீய ஆவிகளை ஓட்டவும், நோய் நொடிகளை குணமாக்கவும் அவர்களுக்கு அதிகாரம் அளித்தார்” மத் 10:1. ஆகவே இயேசுவின் அதிகாரத்தோடு ஆன்ம அறுவடை செய்ய தயாராகுவோம்.